திருவாரூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை
முன்னிலை : திரு. பா. தவமணி,

ந.க.அ4/ 1712/ 2020 நாள்: 28.04.2021.

பொருள்: பொதுப்பணி - நில அளவைப் பதிவேடுகள் துறை, திருவாரூர் மாவட்டம் - செல்வி அ. வைஷ்ணவி, இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்தல் - ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை: சென்னை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித எண் 2497/PSD-1/2020 நாள் 26.05.2020.
2) சென்னை நில அளவை (ம) நிலவரித்திட்ட இயக்குநரின் ஆணை ந.க.ர2/ 5455 / 2020 (நி.அ) நாள் 12.08.2020.
3) இவ்வலுவலகச் செயல்முறை ஆணை ந.க.அ4/1712/2020 நாள் 31.08.2020.
4) தொடர்புடைய பிற ஆவணங்கள்.

**********

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் சென்னை இயக்கக ஆணை மூலமாக திருவாரூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி திருவாரூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் 31.08.2020 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ள செல்வி அ. வைஷ்ணவி என்பவரது பணிகளை தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ், **‘இளநிலை உதவியாளர்’** இனத்தில் 31.08.2020 முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

2) மேலும், இவ்வாணையானது இந்நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஆகியவற்றில் நிலுவையிலுள்ள வழக்குகளில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையுடன் வெளியிடப்படுகிறது.

(ஒ-ம்) உதவி இயக்குநர்,
திருவாரூர்.

**பெறுநர்:**
செல்வி அ. வைஷ்ணவி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருவாரூர்.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது :**
1) கூடுதல் இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, சென்னை.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.
3) மண்டலத் துணை இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருச்சிராப்பள்ளி.

**நகல்:** கண்காணிப்பாளர் I & II.
**நகல்:** பணிப்பதிவேட்டிற்கு.
உபரி – 2.

(ஆணைப்படி / அனுப்பலாகிறது)

29/4/21
கண்காணிப்பாளர்.

29.4.21.